கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**IA.No.3/2024**
**OS.No.80/2024**
திரு.ராதாகிருஷ்ணன் (R.W. –1) **08.10.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு படித்துள்ளேன். என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் நில வியாபாரம் பார்த்து வருகிறேன். கடனுக்காக பணம் கொடுத்து வட்டி வாங்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. எ.ம.சா.1 ஏற்பட்ட தேதி மாதம் வருடம் என்ன என்றால் 4.3.2025. எத்தனை முத்திரை தாளால் அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் 100 ரூபாய் முத்திரைத்தாளால் ஏற்படுத்தப்பட்டது. முத்திரைத்தாள் யார் விற்பனை செய்து உள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் வாங்கவில்லை மனுதாரர் வாங்கி வந்தார்.

2. அந்த ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் மனுதாரர் தான் அழைத்துச் சென்றார். ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் எ.ம.சா.1 ல் குறிப்பிடவில்லை என்றால் சரவணன் தயார் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. நானும் தாவா பிரதிபாதியும் திருப்பூரைச் சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். எ.ம.சா.1 ல் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் லோகநாதன், முத்துமாரி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். அவர்கள் இருவரும் திருப்பூரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரி.

3. இந்த மனுவின் மனுதாரர் ஜானகி கோயம்புத்தூரைச் சேர்ந்தவர் என்றால் ஆமாம். ஜானகி கணவரிடம் எ.ம.சா.1 ல் சாட்சி கையொப்பம்

பெறப்படவில்லை என்றால் சரி. சாட்சிகளை ஜானகி தான் அழைத்து வந்தார். எந்த தேதியில் பேசப்பட்டு எ.ம.சா.1 ஏற்படுத்தப்பட்டது என்றால் 4.3.2025 ஆம் தேதி ஏற்படுத்தப்பட்டு 10 நாட்கள் கழித்து ஒப்பந்தம் ஏற்பட்டது. எ.ம.சா.1 ஏற்பட்ட தேதியில் அந்த ஆவணத்தின் இரண்டாம் பக்கத்தில் ஜானகி மட்டும் ஏலத்தில் பங்கு பெற்று காலி இடத்தை ஏலம் எடுத்து கிரையம் செய்து கொள்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் ஏலத்தில் நான் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

4. அதனால் தான் ஏலத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ–4 ஆவணத்தின் படி ஜானகி பெயருக்கு வங்கி ஏல சான்றிதழ் வழங்கி உள்ளது என்றால் ஆமாம். அதில் ஏல தேதி 27.2.2024 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. தாவா சொத்தைத் தவிர பிரதிவாதிக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் தெரியாது. பிரதிவாதி சாந்தி என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். அவருடைய மாத வருமானம் என்னவென்றால் தெரியாது. சாந்திக்கு எந்த தேதியில் எவ்வளவு தொகை கடனாக கொடுத்தேன் என்றால் 10.4.2023 ல் கொடுத்தேன். நான் தாவா தாக்கல் செய்யப்பட்ட போதுகடன் கொடுத்த சமயத்தில் தாவா சொத்தில் பிரதிவாதி சாந்தி வசித்து வந்தாரா என்றால் இல்லை.

5. எதன் அடிப்படையில் கடன் கொடுத்தீர்கள் என்றால் சொத்தை விலைக்கு பெறுவதற்காக கொடுத்தேன். அதற்கு ஒப்பந்தம் ஏதேனும் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அதை தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை வைத்துள்ளேன். கடன் கொடுத்த சமயத்தில் தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். வில்லங்கச் சான்றிதழ் பார்த்த பிறகுதான் கடன் கொடுத்தேன்

என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்து வங்கியில் கடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரி.

6. நான் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்கு முன்பே தாவா சொத்தைப் பொறுத்து வங்கியில் கடன் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரி. இந்த விவரங்களை தாவாவிலோ தாவாவிற்கு முன்பு தாவா சொத்துக்களை ஜப்தி செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சொல்லவில்லை என்றால் சரி. வாங்கிய வாங்கிய கடனுக்காக சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. தாவா தாக்கல் செய்யப்பட்டபோது தாவா சொத்தை பொருத்து ஏற்கனவே வங்கியில் கடன் உள்ளது என்பதை காட்டும் வில்லங்கச் சான்றிதழ் ஏதேனும் தாவில் தாக்கல் செய்த முன்ஜப்தி மனுவில் ஆவணமாக தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வங்கியில் தாவாவில் தரப்பினராக சேர்த்தீர்களா என்றால் சேர்க்கவில்லை.

7. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி பெற்ற கடனுக்காக கடன் நிலுவைத் தொகையை பிரதிவாதி செலுத்த தவறியதால் வங்கி முறையாக தகுந்த நீதிமன்றங்களில் மனுக்கள் தாக்கல் செய்து வங்கி தாவா சொத்தை சுவாதீனம் 2022 ல் பெற்றுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. எ.ம.சா.ஆ–1 உறுதிமொழி ஆவணம் எதுவும் மனுதாரர் ஏற்படுத்தவில்லை. அதில் உள்ள கையொப்பமும் அவருடையது இல்லை என்றால் தவறு. எ.ம.சா.ஆ–1 ல் உள்ள கையொப்பம் மனுதாரர் உடையது என்பதை நடவடிக்கை எடுத்தீர்களா ஆவணத்தை அவர்தான் ஏற்படுத்தினார். உறுதிமொழி ஆவணம் எ.ம.சா.ஆ–1 ல் உள்ள கையொப்பத்தை மனுதாரர் மறுத்துள்ளதால் அதில் உள்ள கையொப்பம் அவருடையது என்பதை நிரூபணம் செய்ய நான் தயாராக உள்ளேன் என்றால் சரி.

8. தாவா சொத்தை வங்கி நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு ஏலத்தில் கலந்துகொண்டு மனுதாரர் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை மனுதாரர் எனக்கு ஏற்படுத்தித் தர வேண்டிய அவசியமே இல்லை என்றால் தவறு. எ.ம.சா.ஆ.1 ஆவணம் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. மனுதாரருக்கு என்னை யார் என்றே தெரியாது. என்னை அவர் பார்த்ததே இல்லை என்றால் தவறு. உறுதிமொழி ஆவணத்தின் படி மனுதாரர் எந்த தொகையும் எனக்கு கொடுக்க வேண்டியது இல்லை. அந்த ஆவணமே மோசடியானது என்றால் தவறு.

9. ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொன்ன பிறகு சொத்துக்களை ஏலம் எடுத்த பிறகு மனுதாரர் எனக்கேதேனும் தொகை செலுத்தினாரா என்றால் இல்லை. உறுதிமொழி பத்திரம் எழுதிக் கொடுத்தார். அந்த தொகையை வசூல் செய்ய வேண்டிய அறிவுப்பு அனுப்பினீர்களா என்றால் தாவா தாக்கல் செய்து விட்டேன். மனுதாரர் மீது தொகை வசூல் செய்ய வேண்டும் எந்த சட்ட நடவடிக்கும் எடுக்கவில்லை என்றால் தவறு. தாவாவிலும் முன் ஜப்தி மனுவிலும் இந்த மனுவின் மனுதாரர் தரப்பினராக சேர்க்கவில்லை. அதனால் அந்த உத்தரவுகள் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்து தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வங்கியால் ஏலம் விடப்பட்டு மனுதாரர் ஏலம் எடுத்த சங்கதிகளை மறைத்து தாவாவை முன் ஜப்தி மூலம் சொத்துக்கள் தவறாக ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே எ.ம.சா.ஆ–1 ஆவணம் ஏற்பட்டிருந்தால் தாவா தாக்கல் செய்யும்போது அந்த விவரங்களை தெரிவித்து மனுதாரரையும் தரப்பினராக சேர்ந்து உத்தரவுகள் பெற்று இருப்பேன் என்றால் சரியல்ல. பணம் தருவதாக சொன்னார். அதனால் சேர்க்கவில்லை இந்த விபரங்களை மனுவில்

சொல்லவில்லை என்றால் தவறு. தாவாவில் பிரதிவாதி தோன்றா தரப்பினராக ஏற்பட்டுள்ளார் என்றால் சரி. முன்ஜப்தி மனுவிலும் தோன்ற தரப்பினராக பிரதிவாதி உள்ளார் என்றால் ஆமாம். மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் அவர் தரப்பினராக வந்துள்ளார் என்றால் சரி. தாவாவில் எதிர்வாதம் செய்யாமல் பிரதிவாதி மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் மட்டும் எதிர்வாதம் செய்து வருகிறார் என்றால் ஆமாம். தாவா தாக்கல் செய்த பிறகு நானும் பிரதிவாதியும் நல்ல முறையில் பேசி வருகிறோம் என்றால் தவறு. பேச்சுவார்த்தையே இல்லை.

11. நானும் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து கொண்டு தாவாவை தாக்கல் செய்து தாவா சொத்தை தவறாக முன்ஜப்தி செய்து பொய்யான வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் தவறு. மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.10.08 19:09:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.